பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**19 01 2026** **7 15**

திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** காஸா பகுதியில் அமைதியை நிலைநாட்டுவதற்கான குழுவில் இடம்பெறுமாறு பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் அழைப்பு விடுத்துள்ளார்.

**2.** கடல் வளங்களைப் பயன்படுத்தி நீலப் பொருளாதார வளர்ச்சியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

**3.** உத்தரப்பிரதேசத்தில், பிரதமரின் வீட்டு வசதித் திட்டத்தின் கீழ், **62** லட்சம் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருப்பதாக அம்மாநில முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் தெரிவித்துள்ளார்.

**4.** சட்டீஸ்கர்-ஜார்க்கண்ட் எல்லையில் நேரிட்ட பேருந்து விபத்தில் **5** பேர் உயிரிழந்துள்ளனர்.

**5.** உலகப் பொருளாதார அமைப்பின் கூட்டம் சுவிட்சர்லாந்தின் **Davos**-ல் இன்று தொடங்குகிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

காஸா பகுதியில் அமைதியை நிலைநாட்டுவதற்கான குழுவில் இடம்பெறுமாறு பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் அழைப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் பிரதமருக்கு எழுதிய கடிதத்தை, இந்தியாவுக்கான அமெரிக்க தூதர் திரு. செர்ஜியோ கோர் சமூக வலைதளத்தில் பகிர்ந்துள்ளார்.

மத்திய கிழக்கு பகுதியில் அமைதியை நிலைநாட்டுவதற்கான முயற்சியில் தம்முடன் இணையுமாறு அந்தக் கடிதத்தில் வலியுறுத்தியுள்ள அதிபர் ட்ரம்ப், உலகளாவிய மோதல்களுக்கு தீர்வு காண்பதற்கான புதிய அணுகுமுறைக்கு ஆதரவளிக்குமாறும் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<>>>>

அரசு முறைப் பயணமாக புதுதில்லி வந்துள்ள போலந்து நாட்டின் துணைப் பிரதமரும், அந்நாட்டு வெளியுறவு அமைச்சருமான திரு. **Radoslaw Sikorski,** இன்று வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கரை சந்தித்துப் பேச உள்ளார்.

அவரது இந்திய வருகை குறித்து, வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், மத்திய மற்றும் கிழக்கு

ஐரோப்பாவில், இந்தியாவின் மிகப்பெரிய வர்த்தக மற்றும் முதலீட்டு பங்குதாரராக போலந்து திகழ்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2013 முதல் 2023 வரையிலான பத்தாண்டு காலத்தில் மட்டும், இந்தியா - போலந்து இடையிலான இருதரப்பு வர்த்தகம் 192 சதவீதம் அதிகரித்து, 5 புள்ளி ஏழு இரண்டு பில்லியன் டாலரை எட்டியதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

<<<<>>>>

கடல்சார் வளங்களின் பொருளாதார வலிமையை உணர்ந்து மத்திய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக அறிவியல் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

அந்தமானில் நாட்டின் முதலாவது திறந்தவெளி கடல் மீன்வளர்ப்பு திட்டத்தை தொடங்கி வைத்துப் பேசிய அவர், நாட்டின் பரந்து விரிந்த கடல் பரப்பில் உள்ள வளங்கள் ஆராயப்பட்டு நீலப் பொருளாதார வளர்ச்சியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக கூறினார்.

நாடு சுதந்திரமடைந்த பின் 70 ஆண்டுகளாக கடல் வளங்கள் முழுமையாக பயன்படுத்தப்படாத நிலையில் தற்போதைய அரசு அதில் சிறப்பு கவனம் செலுத்தி வருவதாக அவர் கூறினார்.

கிழக்கு, மேற்கு மற்றும் தென் பகுதியில் உள்ள கடல் பரப்புகள் தனித்துவமான பண்புகளை கொண்டிருப்பதோடு, நாட்டின் முன்னேற்றத்திற்கு தனித்துவமான பங்களிப்பை வழங்கி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தற்போது மேற்கொள்ளப்படும் புதிய முயற்சி மூலம் இயற்கையான கடல் சூழலில் திறந்தவெளி கடல்மீன் மற்றும் கடற்பாசி உற்பத்தியில் கவனம் செலுத்தப்படுவதாகவும் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.

<<<<>>>>

மணிப்பூரில் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்து, மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை இணையமைச்சர் திரு. **Tokhan Sahu** ஆய்வு செய்துள்ளார்.

அம்மாநிலத்தில் குடியரசுத்தலைவர் ஆட்சி நடைபெற்றுவரும் சூழலில், **Kakching** மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும்

பணிகளை, கடந்த இரு நாட்களாக அவர் ஆய்வு செய்து, அதிகாரிகளிடமும் கேட்டறிந்தார்.

குறிப்பாக, **Kakching** மாநகராட்சியில், பிரதமரின் நகர்ப்புற வீட்டுவசதித் திட்ப் பணியின் முன்னேற்றத்தை, நேரில் பார்வையிட்ட அவர், அம்ருத் திட்டத்தின் கீழ், நீர்நிலைகள் சீரமைப்புப் பணியையும் அவர் ஆய்வு செய்தார்.

மேலும், சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களுடனும் அவர் கலந்துரையாடினார்.

மொராம்பா மற்றும் கட்சிங் மாவட்ட மருத்துவமனையில் செயல்படுத்தப்படும் திடக் கழிவு மேலாண்மை முறை மற்றும் புலம் பெயர்ந்தோரால் அமைக்கப்பட்டுள்ள வணிக வளாகங்களையும் மத்திய இணையமைச்சர் திரு. **Tokhan Sahu** பார்வையிட்டார்.

**19 01 2026 7 15 Tokhan Sahu-2**

இதனிடயே, மத்திய கல்வி அமைச்சகத்தின் உயர்கல்வித் துறை செயலாளர் திரு.வினீத் ஜோஷி-யும், மனிப்பூரின் பிஷ்னுப்பூர் மாவட்டத்தில் உயர்கல்வித்துறையின் செயல்பாடு குறித்தும், கல்லூரிகளில் மாணவர்களின் வருகை மற்றும் கட்டமைப்பு வசதிகள் குறித்தும் ஆய்வு நடத்தியுள்ளார்.

<<<<>>>>

உத்தரப்பிரதேசத்தில், பிரதமரின் வீட்டு வசதித் திட்டத்தின் கீழ், கடந்த ஒன்பது ஆண்டுகளில், 62 லட்சம் குடும்பங்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டு, சாதனை படைக்கப்பட்டுள்ளதாக, அம்மாநில முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் தெரிவித்துள்ளார்.

லக்னோவில் நடைபெற்ற நிகழச்சியில், இத்திட்டப் பயணாளிகளுக்கான, முதல் தவனைத் தவணைத் தொகையை, பயணாளிகளின் வங்கிக் கணக்கில் செலுத்தி, அவர் பேசினார்.

நகர்ப்புறங்களைச் சேர்ந்த ஏழை மற்றும் நடுத்தர மக்களுக்கு, இத்திட்டம் ஒரு வரப்பிரசாதம் என்று குறிப்பிட்ட அவர், பணிகள் முறைகேடின்றி நடைபெறுவதை உறுதி செய்ய, அனைத்து நகராட்சிகளிலும், இதற்கென பிரத்யேக பொறுப்பு அதிகாரிகளை நியமிக்குமாறும், அதிகாரிகளுக்கு அவர் அறிவுறுத்தியுள்ளார்.

இதேபோன்று, உத்தரப்பிரதேசத்தைச் சேர்ந்த சுமார் ஐந்தரை கோடி குடும்பங்களுக்கு, ஆயுஷ்மான் சுகாதாரக் காப்பீட்டு அட்டைகள் வழங்கப்பட்டு உள்ளதாகவும் யோகி ஆதித்யநாத் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அதிபர் ஷேக் முகமது பின் **Zayed Al Nahyan** இந்தியாவில் அரசுமுறைப் பயணமாக இன்று புதுதில்லி வருகிறார்.

பிரதமர் திரு.நரேந்திர மோடி விடுத்த அழைப்பின் பேரில் இந்தியா வரும் அவர், தமது பதவிக் காலத்தில் மேற்கொள்ளும், ஐந்தாவது இந்தியப் பயணம் ஆகும்.

தமது இந்தப் பயணத்தின்போது, இருதரப்பு வர்த்தகம், மற்றும் பிற ஒத்துழைப்புகள் குறித்து, ,பிரதமர் திரு.நரேந்திரமோடி உள்ளிட்ட தலைவர்களுடன், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அதிபர் பேச்சுவார்த்தை நடத்த உள்ளார்.

<<<<>>>>

சட்டீஸ்கர்-ஜார்க்கண்ட் எல்லையில், பேருந்து ஒன்று, மலைப் பள்ளத்தாக்கில் கவிழ்ந்த விபத்திற்குள்ளானதில் **5** பேர் உயிரிழந்துள்ளனர். **80**-க்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.

**Orsa Bangladara** மலைப்பகுதியில் சென்றுகொண்டிருந்த இந்தப் பேருந்து, பல்ராம்பூர் அருகே பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதாக காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்தில் உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு சத்திஸ்கட் முதலமைச்சர் திரு. விஷ்ணுதேவ் சாய் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார்.

மீட்புப் பணியை ஒருங்கிணைப்பதற்காக உயர் அதிகாரிகள் அடங்கிய குழு சம்பவ இடத்தில் முகாமிட்டிருப்பதாகவும், காயமடைந்தோருக்கு தேவையான மருத்துவ உதவிகளை வழங்க அறிவுறுத்தி இருப்பதாகவும் திரு. விஷ்ணுதேவ் சாய் கூறியுள்ளார்.

<<<<>>>>

தில்லியில், காவல்துறையின் குற்றப் பிரிவினர் மேற்கொண்ட சோதனையில், சுமார் 5 கோடி ரூபாய் மதிப்புள்ள போதைப் பொருட்கள் கைப்பற்றப்படுடுள்ளது.

இது தொடர்பாக, நைஜீரிய நாட்டவர் உள்ளிட்ட சிலர் கைது செய்யப்பட்டதன் மூலம், சர்வதேச போதைப் பொருள் கடத்தல் கும்பலின் முயற்சிகள் முறியடிக்கப்பட்டுள்ளதாகவும், காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

இந்த கும்பலில் தொடர்புடைய, மற்ற நபர்களைக் கண்டறிவதற்காக, தொடர் விசாரணை நடத்தப்பட்டு வருவதாகவும், தில்லி காவல்துறையினர் கூறியுள்ளனர்.

<<<<>>>>

சட்டீஸ்கர் மாநிலம் பீஜப்பூர் மாவட்டத்தில், பாதுகாப்புப் படையினருக்கும், நக்சலைட்டுகளுக்குமிடையே நடைபெற்ற சண்டையில் கொல்லப்பட்ட தீவிரவாதிகளின் எண்ணிக்கை ஆறாக அதிகரித்துள்ளது.

கடந்த இரு நாட்களாக நடைபெற்ற இந்த சண்டையில், ஏற்கனவே நான்கு பேர் உயிரிழந்த நிலையில், சம்பவ இடத்திலிருந்து நேற்று மேலும் இரு உடல்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக, பீஜப்பூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.ஜிதேந்திர யாதவ் தெரிவித்துள்ளார்.

மேலும், ஏ.கே.47 ரக துப்பாக்கிகள் உள்ளிட்ட ஆயுதங்கள் மற்றும் வெடிப்பொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்நிலையில், நக்சலைட்டுகள் அனைவரும், ஆயுதங்களைக் கைவிட்டு, வளர்ச்சிப் பாதையில் இணையுமாறு அம்மாநில முதலமைச்சர் திரு. விஷ்னு தேவ் சாய் கேட்டுக்கொண்டுள்ளார்.

தற்போதைய நடவடிக்கையின் மூலம், பீஜப்பூர் தேசியப் பூங்கா பகுதி, நக்சலைட்டுகள் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டுள்ளதாக,

அம்மாநில துணை முதலமைச்சரும் உள்துறை அமைச்சருமான திரு.விஜய் சர்மா கூறியுள்ளார்.

<<<<>>>>

ஐரோப்பிய நாடான போர்ச்சுகல் அதிபர் தேர்தலுக்கான முதல் சுற்று வாக்கு எண்ணிக்கை முடிவில் சோசலிஷவாதியான திரு. Antonio Jose Seguro முன்னிலை பெற்றுள்ளார்.

கடந்த 11-ந் தேதி முதல் நடைபெற்று வந்த இத்தேர்தலில், 2 லட்சத்து 18ஆயிரத்திற்கும் அதிகமானோர் தங்களது வாக்குரிமையை செலுத்தினர்.

வாக்குப்பதிவு நேற்றுடன் நிறைவடைந்த நிலையில், இத்தேர்தலில் பதிவான வாக்குகள் உடனடியாக எண்ணப்பட்டு, முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் முதல் சுற்றில் திரு. Antonio Jose Seguro-வுக்கு 30 புள்ளி ஆறு ஒன்பது சதவீத வாக்குகளும், Chega கட்சித் தலைவர் திரு. Andre Ventura-வுக்கு 26 புள்ளி ஒன்பது ஏழு சதவீத வாக்குகளும் கிடைத்துள்ளது.

போர்ச்சுகள் அரசியல் சாசனத்தின்படி 50 சதவீத த்திற்கும் அதிகமான வாக்குகள் பெறுபவரே வெற்றி பெற்றவராக

கருதப்படுவதால் அடுத்த மாதம் **8**ஆம் தேதி இரண்டாவது சுற்று வாக்குப்பதிவு நடைபெற உள்ளது.

<<<<>>>>

உலகப் பொருளாதார அமைப்பின் கூட்டம் சுவிட்சர்லாந்தின் **Davos**-ல் இன்று தொடங்குகிறது.

இம்மாதம் **23**ஆம் தேதி வரை நடைபெற உள்ள இக்கூட்டத்தில் பல்வேறு நாடுகளின் தலைவர்கள், முன்னணி தொழில் நிறுவனங்களின் தலைமைச் செயல் அதிகாரிகள் உட்பட மூவாயிரத்துக்கும் அதிகமான பிரதிநிதிகள் பங்கேற்கின்றனர்.

இந்தியாவில் இருந்து மத்திய அமைச்சர்கள் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான், திரு. அஷ்வினி வைஷ்ணவ், திரு. பிரல்ஹாத் ஜோஷி, திரு. ராம்மோகன் நாயுடு, மாநில முதலமைச்சர்கள் திரு. சந்திரபாபு நாயுடு, திரு. ரேவந்த் ரெட்டி, திரு. தேவேந்திர ஃபட்னவிஸ், திரு. மோகன் யாதவ், திரு. ஹிமந்த பிஸ்வா சர்மா, திரு. ஹேமந்த் சோரன் உள்ளிட்டோர் பங்கேற்க உள்ளனர்.

<<<<>>>>

விஜய் ஹசாரே கோப்பை கிரிக்கெட் போட்டியில் சௌராஷ்டிரா அணியை **38** ரன் வித்தியாசத்தில் வீழ்த்தி விதர்பா அணி பட்டம் வென்றது.

**பெங்களூருவில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் முதலில் களமிறங்கிய விதர்பா அணி, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 8 விக்கெட் இழப்புக்கு 317 ரன் எடுத்தது.**

**பின்னர் 318 ரன் வெற்றி இலக்குடன் களமிறங்கிய சௌராஷ்டிரா அணி, 48 புள்ளி 5 ஓவரிலேயே 279 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.**

**<<<<The End>>>>**